பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 06 | செவ்வாய்க்கிழமை | 22.07.2025 | அதிர்வு 352

## ஓகஸ்ட் 10 ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான திகதியைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி, 06▶





# செம்மணிப் புதைகுழியில் நேற்று ஏழு எலும்புக்கூடுகள் அடையாளம்

## இதுவரை 72 என்புத் தொகுதிகள் கண்டெடுப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

இடைநிறுத்தப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று மீள ஆரம்பமாகின. இதன் போது 7 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன.

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளின் போது மனித என்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய கடந்த மே மாதம் 15ஆம் திகதி முதல் முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின. 06▶

## செம்மணியில் மீட்கப்படும் மனித எச்சங்கள் தொடர்பில்

# தேவநேசன் குழுவின் அறிக்கையை இணைத்து ஆய்வு செய்தால் பல உண்மைகள் வெளிவரும்

## தமிழரசின் பொதுச்செயலர் சுமந்திரன் நம்பிக்கை

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பில் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ள விவரங்களை தற்போது செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் கண்டறியப்படும் மனித எச்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதன் ஊடாக பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர முடியும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில்இடம்பெற்றகாணாமல்ஆக்கப்படல்சம்பவங்கள்தொடர்பில் ஆராய்வதற்கென கலாநிதி தேவநேசன் நேசையாதலைமையில்கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, 06▶






யுத்த காலத்தில் யாழ் மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த 52 ஆவது டிவிஷன் படையணியின் பொதுக் கட்டளைத் தளபதியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி.

பிற்காலத்தில் இலங்கை இராணுவத்தின் பதில் இராணுவத் தளபதியாகவும், இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலையில் இராணுவத்தின் சிரேஷ்டதர நிலை அதிகாரியாகவும் பணியாற்றியவர்.

2007 இல் இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக பணியாற்றியவர்.

அந்தச் சமயத்தில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் குதித்த போது, அவருக்கு ஆதரவாகப் பல்வேறு அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் தேர்தல் பிரசாரத்துக்கான தில்லுமுல்லுகள் முன்னெடுக்கப்பட்டன.

அப்படிப்பட்ட ஒரு தில்லுமுல்லில் 06▶

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்கும் ரோம் சட்டத்தில் இலங்கை ஒப்பமிட வேண்டும்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்குப் பரிந்துரை

"சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும் சர்வதேச பிரகடனத்தை "ரோம் சட்டம்" என்பர். அந்தச் சட்டத்தை அங்கீகரித்து அதில் ஒப்பமிடுவது குறித்து இலங்கை அரசு பரிசீலிக்க வேண்டும்."

– இவ்வாறு இலங்கை அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் ஐவரும் சேர்ந்து இந்தச் சிபார்சை முன்வைத்துள்ளனர்.

ஐ.நாவின் காணாமல்போனவர்களுக்கான குழுவுக்கு இலங்கை அரசு இப்போது ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அந்தக் கட்டத்தில், அதற்குச் சமாந்தரமான ஓர் அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அந்த அறிக்கையை நேற்று சமர்ப்பித்து வெளியிட்டுள்ளது.

அதிலேயே ரோம் சட்டத்தை ஏற்று ஒப்பமிடுமாறு இலங்கை அரசுக்குப் பரிந்துரைத்திருக்கின்றது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

(இந்தச் செய்தி தொடர்பான மேலதிக விடயங்கள் இன்றைய ஆசிரிய தலையங்கத்தில் ஆராயப்பட்டுள்ளன.)

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி கொழும்பில் துப்பாக்கியுடன் சிக்கினார்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பின்னர் இராணுவத்தினரால் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரான ரமேஷ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிபத்கொடை புதிய வீதியில் வைத்து பேலியகொடை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து ரி – 56 ரக துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குற்றச் செயல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் மேற்படி நபர் துப்பாக்கியொன்றைத் தம் வசம் வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# அநுர அரசாங்கத்தின் பயணம் தவறெனில் அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்

## மைத்திரி கடும் எச்சரிக்கை



"தேசிய மக்கள் சக்தி அரசின் பயணம் தவறெனில், அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களே கடந்துள்ளன. எனவே, அரசின் பயணம் சரியா அல்லது தவறா என்பதை ஒன்றரை வருடங்கள் சென்ற பின்னரே அறியக்கூடியதாக – உணரக்கூடியதாக இருக்கும்.

பயணம் சரியெனில் மக்கள் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். தவறான பயணமெனில் மக்கள் எதிர்ப்பை வெளியிடுவார்கள்.

நாட்டில் இன்னமும் உரிய மாற்றம் இடம்பெறவில்லை என்றே நானும் கருதுகின்றேன். பொருட்களின் விலை அதிகமாக உள்ளது. மக்களுக்கு வாழ்வதற்கு கஷ்டமாக உள்ளது.

அதேவேளை, கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் உரிய மதிப்பாய்வின் பின்னரே அது பற்றி கருத்து வெளியிட முடியும்." – என்றார்.



# இலங்கை நிலையான பொருளாதாரத்துடன் உலகளவில் முன்னேற ஐ.எம்.எவ். பேராதரவு

## ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பில் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீடிக்கப்பட்டகடன்வசதிதொடர்பானஎதிர்காலமுன்னெடுப்புகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

தற்போதைய அரசின் கீழ் இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை எட்டுபட்டுள்ளதால், அந்த வலுவான அடித்தளத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதன் மூலமும் புதிய பொருளாதார வாய்ப்புகளைப் பெறுவதன் மூலமும் இலங்கையைச் சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்லும் திட்டம் துரிதப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்கள் குறித்து சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுக்கு விளக்கிய ஜனாதிபதி, அந்த சவால்களுக்கு மத்தியிலும் 2026 வரவு – செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் நினைவு கூர்ந்தார்.

நாட்டில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் சுங்க வரிச் சலுகைகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியைப் பேணுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இலங்கைக்குத் தொடர்ந்து கிடைக்கும் என்று ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் இதுவரை இலங்கைக்கு அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டுக்குக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து பயன்களையும் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக வலியுறுத்தினார்.

இலங்கையைப் பொருளாதார ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்வதில் ஜனாதிபதி தலைமையிலான அரசு மேற்கொண்ட உறுதிப்பாட்டைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் இலங்கையை உலகளவில் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் தேவையான ஆதரவை வழங்கவும் உடன்பாடு தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி இவான் பாபர்ஜயோஜியோ, சந்தேஷ் துங்கானா, உர்சுலாவிரியாடினாடா,தினார்பிரிஹார்டினி, சம்சன் குவாலிங்கனா, ஓஸ்லெம் அய்டின் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதிகளான மார்த்தா வோல்டெமிகேல் மற்றும் மானவி அபேவிக்ரம ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.



இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரஸ்ஸல் அப்போன்சு, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, நிதிக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.கே.சி. சேனநாயக்க, இலங்கை மத்திய வங்கி சிரேஷ்ட பிரதி ஆளுநர் கே.எம்.ஏ.என். தவுலகல, நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் பி.கே.ஜி. ஹரிச்சந்திர, நிதிக் கொள்கை சபையின் செயலாளர் கலாநிதி சி. அமரசேகர, பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளர் ஜே.எஸ். ஜெகஜீவன் ஆகியோர் பங்கேற்றனர்.



# பனை சார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று ஆரம்பம்

வடக்கு மாகாண பனை எழுச்சி வாரத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து ”எங்கள் வாழ்வியலில் பனை” என்ற தொனிப்பொருளில் நடத்தும் பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப. 8 மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ளன.

வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான நடராஜா திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு செயலாளர் மு.நந்தகோபாலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் பி.ப 6 மணி முதல் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.








# தமிழர்களின் இறையாண்மையை ட்ரம்ப் மீட்டுத் தந்தால் அரைக் கோடி மக்கள் நோபல் பரிசுக்கு பரிந்துரைப்பர்

## ஆதரவைப் பெற்றுத் தருவாம் என்கின்றனர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(கி.வசந்தன்)

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தமிழர் இறையாண்மையை மீட்டுத் தந்தால் 5 மில்லியன் (அரைக்கோடி) மக்களின் கையெழுத்துகளுடன் நோபல் அமைதி பரிசுக்கு பரிந்துரை செய்வோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

3,074 நாளச்களாக வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்ப்டோரின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

எங்கள் அன்பான குழந்தைகள் திரும்பி வர வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, எதிர்காலத்தில் எந்தத் தமிழ் குழந்தையும் அதே கதியை அனுபவிக்கக்கூடாது என்பதற்காகவுமே எங்கள் கூக்குரல்கள்.

நீதி கோருவதற்கும், தமிழ் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவைக் கோருவதற்கும், எதிர்கால இனப்படுகொலையிலிருந்து நமது மக்களைப் பாதுகாப்பதற்கும் துக்கத்துடன் மட்டுமல்ல, உறுதியுடனும் நாங்கள் இங்கு தினமும் கூடுகிறோம்.

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி 83 கறுப்பு ஜூலை படுகொலைக்குப் பிறகு ஓர் அரசியல் தீர்வை அமுல்படுத்தியிருந்தால், 2009 இனப்படுகொலையை தடுக்கப்பட்டிருக்கலாம்.

1948 முதல் அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் – பாகுபாடு, நில அபகரிப்புகள், காணாமல் ஆக்குதல், கொலைகள் மட்டுமே – ஒரு நாள் ஜனாதிபதி டிரம்ப் போன்ற ஒரு தலைவர் வந்து தமிழ் தேசியப் பிரச்சினையை ஒரே நாளில் தீர்க்க முடியும் என்பதை அவர்கள் உணர்ந்தால், இறுதியில் சிங்கள அரசுகளின் செயல்கள் வீணானவை என்று நிரூபிக்கப்படும்.

தமிழர்களைக் கொல்வது அவர்களின் கைகளில் சாபமும் பாவமும். அவர்களின் துன்பம் இப்போதுதான் தொடங்கிவிட்டது. குறிப்பாக ராஜபக்ஷ, கோட்டாபய ஜனாதிபதிக்குப் பிறகு.

பல உலகத் தலைவர்கள் வந்து போய் விட்டார்கள். ஆனால் இன்று ஒரே ஒரு தலைவருக்கு மட்டுமே செயல்பட தைரியமும் தெளிவும் உள்ளது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். அவர் பேசும்போது உலகம் கேட்கிறது – சிலர் மரியாதைக் காகவும், மற்றவர்கள் பயத்திற்காகவும் – ஆனால் அவர் காரியங்களைச் செய்து முடிக்கிறார்.

ஜனாதிபதி ட்ரம்பிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு, தமிழர்களுக்கு நீதியை மீட்டெடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். தமிழ் இறையாண்மையை மீட்டெடுக்க அவர் எங்களுடன் நின்றால், உலகெங்கிலும் உள்ள தமிழ் தாய்மார்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் அவரை நோபல் அமைதி பரிசுக்கு பரிந்துரைக்க ஐந்து மில்லியன் கையெழுத்துக்களை சேகரிப்பதாக உறுதியளிக்கிறோம்.

உலகம் ஒருபோதும் எதிர்பார்க்காத அமைதித் தூதராக ட்ரம்ப் மாறட்டும். – எனத் தெரிவித்தார்



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிக்கியே முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கம கேயும், அவரின் கீழ் 'சதொ தலைவராக இருந்த (பின்னர் அமைச்சரான) நளின் பெர்னாண்டோவும் இப்போது தலா இருபது வருட சிறைவாசம் அனுபவித் துக் கொண்டிருக்கின்றார்கள்.

மஹிந்தானந்த அளுத்கமகே விளை யாட்டு துறை அமைச்சராக இருந்தபோது பல கோடி ரூபா பெறுமதிக்கு கரம் மற்றும் செக்கர் போர்ட்டுக்கள் சதொச மூலமாக இறக்குமதி செய்யப்பட்டு தவறான முறை யில் விநியோகித்தார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

அந்த வழக்கில் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக இருந்த மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி புலன்வி சாரணையாளர்களுக்கு ஒத்துழைக்கும் வகையிலும், அரசுத் தரப்புக்கு உதவி அளிக்கும் விதத்திலும், அவர்களோடு சேர்ந்து சாட்சியமளித்து, ஒத்தூதியிருந் தார். அவரது உதவியும் ஒத்துழைப்பும் மஹிந்தானந்த அளுத்கமகேயும் நளின் பெர்னாண்டோவும் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படுவதற்கு பெரிதும் உதவின.

இப்போது இதே போன்று கரம் மற்றும் செக்கர் போர்ட்டுகளை இறக்குமதி செய்து ஊழல் செய்த மற்றொரு சம்பவத்தில் புதிய வழக்கு ஒன்றை சட்டமா அதிபர் தாக்கல் செய்திருக்கிறார். அந்த வழக்கில் மஹிந்தானந்த அளுத்தமகே, நளின் பெர்னான்டோ ஆகியோரோடு மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சிக்கும் எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தி ருக்கிறார் சட்டமா அதிபர்.

முன்னைய வழக்கில் சிறையில் இருக் கும் மஹிந்தானந்த அளுத்தமகே மற்றும் நளின் பெர்னான்டோ ஆகியோருக்கும் மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சிக் கும் இந்த வழக்கில் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கி யிருக்கின்றார் கொழும்பு சிரேஷ்ட மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்தின.

இதற்கிடையில் இந்த வழக்கில் தமக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை ஆட்சேபித்து மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

முன்னைய வழக்கில் அரசுத் தரப்புச் சாட்சியாக நீதியாகச் செயற்பட்டு, லஞ்ச – ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய தமக்கு எதிராக, இப்போது அதேபோன்ற இன்னொரு வழக்கைத் தொடுப்பது முறையற்றது என அவர் அந்த ரிட் மனுவில் நீதிமன் றத்திடம் மன்றாடியிருக்கின்றார்.

ஆட்சி காலத்தில் சேர்ந்து செய்துவிட்டு, இப்போது மற்றப் பக்கத்தில் வந்து நின்று 'ஸேம் சைட் கோல்' அடித்தால் போல, தான் தப்பி விடலாம் என்று அவர் எண் ணுகின்றார் போலும்.

விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், அது பற்றி அதிகம் விமர்சிக் காமல் விட்டு விடுவோம்...!

## ஓகஸ்ட் 10ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

அதன்படி, இரண்டாவது வினாத்தாள் காலை 9.30 மணி முதல் 10.45 மணி வரையிலும், முதலாவது வினாத்தாள் முற்பகல் 11.15 மணி முதல் பிற்பகல் 12.15 மணி வரையிலும் நடைபெறவுள்ளது.

## செம்மணிப் புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்தமாக 9 நாள்கள் இடம்பெற்ற முதலாம் கட்ட அகழ்வுப் பணிகளின்போது 9 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப் பட்டிருந்தன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளை 45 நாள்கள் மேற்கொள்வது எனவும், 15 நாள்களுக்கு ஒருமுறை சிறிய இடை நிறுத்தல்களுடன் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது எனவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப் பட்டது.

அதன் பிரகாரம் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட முதல் 15 நாள்களுக்கான அகழ்வுப் பணிகள் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி தொடக் கம் ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெற்று இடைநிறுத் தப்பட்டன.

முதலாம் கட்ட அகழ்வு மற்றும் இரண் டாம் கட்டத்தின் முதல் 15 நாள்கள் இடம் பெற்ற அகழ்வு என மொத்தமாக 24 நாள்கள் இடம்பெற்ற அகழ்வில் இருந்து 65 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டிருந் தன.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 16ஆம் நாள் அகழ்வுப் பணி கள் நேற்று ஆரம்பமாகின.

நேற்று "தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இலக்கம் 01" இல் இருந்து 4 மனித என்புத் தொகுதிகள் பகுதியளவில் அடை யாளம் காணப்பட்டன.

மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்க லாம் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதியான "தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இலக்கம் 02" இல் இருந்து 3 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன.

அதன்பிரகாரம் நேற்று மொத்தமாக 7 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட என் புத் தொகுதிகளின் எண்ணிக்கை 72ஆக அதிகரித்துள்ளது.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா வின் கண்காணிப்பில் துறைசார் நிபுண ரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவா வின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் ஆணையாளர் மிராக் ரஹீம், காணா மல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழு வின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவி னர்கள் சார்பான சட்டத்தரணி வவி.எஸ். நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரண வன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.



## தேவநேசன் குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜெமிஸா இஸ்மாயில் மற்றும் எம். சி.எம்.இக்பால் ஆகிய உறுப்பினர்களுடன் கூடியதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி ஆணைக்குழு விடம் கையளிக்கப்பட்டது.

1990 – 1998 ஆம் ஆண்டு வரை யான காலப் பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பதிவான வலிந்து காணா மல் ஆக்கப்படல் சம்பவங்கள் மற்றும் அந்தப் பகுதிகளின் வீட்டு உரிமையா ளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட் டமை என்பன தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப் பட்ட இந்தக் குழுவின் அறிக்கையில், 1990 – 1998 க்கு இடைப்பட்ட காலப்பகு தியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர், வயது, காணாமல் ஆக்கப்பட்ட ஆண்டு, இறுதியாகச் சென்றிருந்த இடம், நேரடி சாட்சி, முறைப்பாடு அளித்தவர் விவரம் உள்ளிட்ட அவசியமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே, இது பற்றிச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அந்த அறிக்கையில் உள்ள விவரங்களையும் தற்போது செம்மணி – சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் பற் றிய விவரங்களையும் ஒன்றிணைத்து ஆராய்வதன் ஊடாக இந்த மனித எச்சங் களுக்குச் சொந்தமான நபர்கள் தொடர் பான பல்வேறு உண்மைகளை வெளிக் கொணர முடியும் என நம்பிக்கை வெளி யிட்டார்.

# துணுக்காயில் நாளை இரத்ததானம்




முன்னை நாள் துணுக்காய் பிரதேச செயலாளர் அமரர் நா.நந்தகுமார் நினைவாக இரத்ததான நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலகத்தில் நாளை புதன்கிழமை இடம்பெறுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக பணியாற்றிய அமரர் நா.நந்தகுமார் அவர்கள் தனது கடமை நேரத்தின் போது 29.06.2007 உயிரிழந்திருந்தார்.

அவரது நினைவு தினத்தை நினைவுகூரும் முகமாக வருடந் தோறும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் இந்த வருடமும் அவரது ஞாபகார்த்தமாக நாளை புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் குருதித்தட்டுப்பாடு நிலவி வருவதால் இந்நிகழ்விற்கு முக்கியத்துவம் அளிக்கும் முகமாக ஆர்வமுடையவர்ளை இரத்ததானம் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர் ஏற்பாட்டு குழுவினர்.

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் தேக்கங்காடு பகுதியில் பணியின் நிமித்தம் சென்று வரும்போது மிலேச்சத்தனமான கிளைமோர் தாக்குதலில் அப்போதைய துணுக்காய் பிரதேச செயலாளர் நாகலிங்கம் நந்தகுமார் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தானந்த, நளினுக்கு எதிராக நீதிமன்றில் மற்றுமொரு குற்றப்பத்திரிகை நேற்று தாக்கல்

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி ஆகியோருக்கு எதிராகப் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்தனர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டில் நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

2014 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது சதொச நிறுவனத்தின் ஊடாக கரம் போர்ட்கள் மற்றும் டாம் போர்ட்கள் இறக்குமதி செய்ததன் ஊடாக அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தினர் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு தற்போது கடூழியச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

நேற்றைய குற்றப் பத்திரிகையைத் தொடர்ந்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன மூன்று பிரதிவாதிகளையும் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

ஆனால், அவர்களுக்கு ஏற்கனவே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையால் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோரை அடுத்த திட்டமிடப்பட்ட விசாரணை திகதியில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக ஆஜரான வழக்கறிஞர், தற்போதைய வழக்கில் குற்றச்சாட்டுகளின்



நிலைத்தன்மையை எதிர்த்து, ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்பத் திட்டமிட்டுள்ளதாக நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

ஆரம்ப ஆட்சேபனைகளைப் பரிசீலிக்க செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நளின் பெர்னாண்டோ சார்பில் ஜனாதிபதி சஞ்சய் ராஜரட்ணவும், மஹிந்தானந்த அளுத்கமகே சார்பில் ஜனாதிபதி நளின் லட்டுவஹெட்டி ஆஜராகினர்.

ஜெனரல் மல்லவராச்சி சார்பில் வழக்கறிஞர் சஞ்சய மரம்பே, கீத் கருணாரத்ன மற்றும் பசன் கருணாரத்னா ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஆஜராகியுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார்? சஹ்ரான், நௌபர் மௌலவியே என்கிறார் வீரசேகர



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனில் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, தகவல்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்."

– இவ்வாறு அரசை வலியுறுத்தியுள்ளார் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"சஹ்ரான் மற்றும் நௌபர் மௌலவி ஆகியோரே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள். இவர்களில் சஹ்ரான் இறந்துவிட்டார். எப்.பி.ஐ., இன்டர்போல் ஆகியவற்றுக்குக் கூட கண்டுபிடிக்க முடியாமல்போன பிரதான சூத்திரதாரி ஒருவர் இருந்தால், அவர் பற்றி தகவல் வெளியிடாமல் இருப்பது ஏன்? இது பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களை அவமதிக்கும் செயல் என்றே நான் கருதுகின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் போது ஷானி அபேசேகர சேவையில் இருந்தார். தற்போது அவருக்கு மீண்டும் பதவி வழங்கப்பட்டுள்ளது. எனவே, எப்படியான பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்கின்றார்கள் எனப் பொறுத்திருந்து பார்ப்போம். அவ்வாறு பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்க முடியாமல் போனால், தம்மால் போலியான கருத்தே சமூகமயப்படுத்தப்பட்டது என்பதை மக்கள் முன்னிலையில் அரசு தெரிவிக்க வேண்டும்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் பிள்ளையானுக்குத் தொடர்பு இல்லை என்றே கூறப்படுகின்றது. சிலவேளை அவருக்குத் தெரிந்திருந்தால் அது பற்றி விசாரணை செய்யலாம். முழு அதிகாரமும் தற்போது அரசு வசம் உள்ளது. அவ்வாறு விசாரணைசெய்துஅனைத்துதகவல்களும்மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும்." – என்றார்.

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**24 - 11 - 1948**



**மறைவு**
**21 - 07 - 2025**

## விமலராஜன் கனகநாயகம் வில்லியம்

**(முன்னாள் வட-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர், வடமாகாண விளையாட்டுத்துறை ஆலோசகர்)**

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன்" [2 திமோத்தேயு 4:7)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகநாயகம் வில்லியம் விமலராஜன் அவர்கள் நேற்று (21.07.2025) ஆம் திகதி திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி டேவிட் கனகநாயகம் பியற்றிஸ் தவமலர் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி E.T. ஸ்கோட், பியற்றிஸ் செல்வமலரின் பாசமிகு மருமகனும், இவாஞ்சலின் இந்திராணி அவர்களின் அன்புமிகு கணவரும், டேவிட் ஜெயக்குமார்(குமார்,திருகோணமலை), பியற்றிஸ் கிறிஷ்ஷாந்தி (Chrisho,கொழும்பு)ஆகியோரின் பாசதிகு தந்தையும், காலஞ்சென்ற R.K. Jeyarajah (உரிமையாளர் (PAN - AM Foods),அமுத செல்வி ஜோன் பிறேமசந்திரன் (அவுஸ்ரேலியா) அவர்களின் பாசமிகு சகோதரனும், யெசி கிறோசியினி (திகோணமலை) டெஸ்மண்ட் பிரதீப் (Colombo) அவர்களின் பாசமிகு மாமனாரும், றோகன் அபியூத் பாசமிகு அப்பப்பாவும் Selvan Scott, திருமதி காந்தி Jeyarajah (அவுஸ்ரேலியா), ஜீவா பிரேமச்சந்திரன் (அவுஸ்ரேலியா) காலஞ்சென்ற ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் ஆராதனை செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள கொட்டடி மெதடிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**(0779221293)**



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## திருப்புமுனை பரிந்துரை

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழர்கள் விடாது - உறுதியாக - வலியுறுத்தி வருகிறோம்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும் சர்வதேச பிரகடனத்தை 'ரோம் சட்டம்' என்று சொல்லுவார்கள்.

1998 ஜூலையில் தயாரிக்கப்பட்ட இந்தச் சட்டம், 2002 ஜூலையில் - அதாவது 23 ஆண்டுகளுக்கு முன்னர் - நடைமுறைக்கு வந்தது. அதில் 125 நாடுகள் ஒப்பமிட்டு அதை ஏற்றுக் கொண்டுள்ளன. ஒப்பமிட்ட நாடுகள் இந்தச் சட்டத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றமையினால் இத்தகைய நீதிமன்ற விசாரணைக்கு அவை கடப்பாடு உடையவை.

ஆனால் 2001 இல் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த காலத்தை ஒட்டி ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசு அதில் ஒப்பமிட அப்போது மறுத்து விட்டது. அன்று முதல் இன்று வரை இலங்கை, அந்த ரோம் சட்டத்தை ஏற்று ஒப்பமிடவில்லை. அதனால் அந்தச் சட்டத்தின் கீழ் உருவான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் நிற்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இல்லை.

அப்படியான சந்தர்ப்பத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபை பரிந்துரைத்தால் மட்டுமே இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணையை எதிர்கொள்ளும் நிலைமை வலுக் கட்டாயமாக வரும்.

நாடுகளில் இடம்பெற்ற இனவழிப்பு, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்புக் குற்றங்கள் ஆகிய நான்கையும் விசாரிக்கும் தனித்துவமான நியாயாதிக்கம் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு உண்டு.

இலங்கை ரோம் சட்டத்தில் கையெழுத்திடாத காரணத்தினாலும் -

இலங்கையில் இடம் பெற்ற இன வழிப்பு, மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள், ஆக்கிரமிப்பு குற்றங்கள் ஆகியவை தொடர்பான விடயத்தை ஐ.நா பாதுகாப்புச் சபை மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கையளிக்க வைக்கும் சர்வதேச ஆதரவு தமிழர் தரப்புக்கு இல்லாததாலும் -

இந்த விடயத்தை இதற்கு அப்பால் நகர்த்த முடியாமல் தமிழர் தரப்பு அல்லாடி வருகின்றது. காலமும் இழுபடுகின்றது.

இந்தச் சமயத்தில் இப்போது ஐ.நாவின் காணாமல் போனவர்களுக்கான குழுவுக்கு இலங்கை அரசு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய காலகட்டத்தில், அதற்கு சமாந்தரமான ஓர் அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சமர்ப்பிக்க வேண்டிய சூழலில், இப்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அந்த அறிக்கையை நேற்று சமர்ப்பித்து வெளியிட்டுள்ளது.

அதில் ரோம் சட்டத்தில் கையெழுத்திடுவது குறித்து பரிசீலிக்குமாறு இலங்கை அரசுக்கு பரிந்துரை செய்திருக்கின்றது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கான கதவை திறந்து விடும் முதல் நடவடிக்கையாக - ஆரம்ப முயற்சியாக - இதனைக் கொள்ள முடியும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் தன்னுடைய படைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்ளும் ஆபத்து வரும் என்று கருதும் கொழும்பு அரசு, நிச்சயமாக இந்த பரிந்துரையை ஏற்றுக் கொள்ள மாட்டாது என்று நம்பலாம். அது மாத்திரமல்ல, இந்தப் பரிந்துரை இலங்கையின் இறைமையை சர்வதேசத்திடம் அடமானம் வைக்கும் ஏற்பாடு என்றும் தன் வியாக்கியானத்தை கொழும்பு இன்றே வெளியிடும் எனவும் எதிர்பார்க்கலாம்.




# விவசாயத்துக்குக் காணி கோரி மக்கள் செட்டிக்குளத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிக்குளம் கமநல சேவை நிலையத்திற்கு முன்பாக மெனிக்பாம் மக்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது

தமக்கு அருவித்தோட்டம் பகுதியில் வழங்குவதாகக் கூறிய ஒரு ஏக்கர் விவசாயக் காணியைத் தரும்படி கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டகாரர்கள் “அரச அதிகாரிகளே! ஏழைகளின் ஒருவேளை உணவை நிம்மதியாக உண்ணவிடு!”, “மெனிக்பாமில் வசிக்கும் மக்களுக்கு வயல் காணி ஒரு ஏக்கர் வீதம் வழங்கு!” என்பன போன்ற பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் –

எங்களை 2004ஆம் ஆண்டு சிதம்பரபுரம் முகாமில் இருந்து அரை ஏக்கர் மேட்டுக்காணி மற்றும் 01 ஏக்கர் வயல் காணி தருவாதாக தெரிவித்து மெனிக்பாமில் குடியேற்றம் செய்தனர். ஆனால் தற்போது வரை எங்களிற்கு 01 ஏக்கர் வயல் காணி தரப்படவில்லை.

மேலும் கூலி வேலையை மேற்கொண்டே எமது வாழ்வாதாரம் போகின்றது. அத்தோடு கடந்த காலத்தில் கிராம சேவையாளர் இடம் சென்றும் வயல் காணி தொடர்பாக நாங்கள் பதிவு செய்திருந்தோம். அதன் மூலமாக ஒரு சிலருக்கு வழங்கப்பட்டது. ஆனால் 20 வருடமாகியும் எங்களிற்கு கிடைக்கவில்லை. அத்தோடு அருவித்தோட்டம் கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் பல ஏக்கரில் வயல் காணிகளை பெற்று வயல் செய்கின்றனர். ஆனால் எங்களிற்கு எந்த வயற் காரணிகளும் கிடைக்கவில்லை. எனவே எங்களிற்கு தருவதாக தெரிவித்த வயற்காணியினை தரவேண்டும். – என தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

நாங்கள் 2004ஆம் ஆண்டில் இருந்து அருவித்தோட்டம் பகுதியில் மானாவாரியாக அரை ஏக்கர் மற்றும் ஒரு ஏககரில் பயிர் செய்து வந்திருந்தோம். 2005, 2006, 2007 காலப் பகுதியில் காணியினுள் இராணுவம் எங்களை நுழைய விடாமல் எங்களை வற்புறுத்தி இராணுவத்திற்கு வழங்கக் கோரியிருந்தனர்.

மேலும் இந்தக் காணிகள் படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் 13 ஏக்கர் அடிப்படையில் வழங்கப்பட்டவையாகும். மேலும் இக்காணி உரித்தினை நீக்கி வேறு ஒருவருக்கு வழங்க முடியாத நிலையும் இருந்தது. இந்நிலையில் இந்தக் காணிக்குரியவர் இல்லாத நிலையில் காணி இல்லாதவர்கள் கூட அதக் காணிகளைத் துப்பரவு செய்து பயிர்ச்செய்கை நடவடிக்கைய்சி மேற்கொள்வதற்கு பிரதேச செயலகம் மற்றும் கமநல சேவை நிலையத்தாலும் அனுமதி வழங்கப்பட்டது. குறிப்பாக 2010ம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் எந்தவொரு நிலமும் பாவனையின்றி இருக்கமுடியாது என்ற அடிப்படையில் அவை வழங்கப்பட்டன.

தொடர்ச்சி▼











# விவசாயத்துக்குக் காணி கோரி மக்கள் செட்டிக்குளத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

தொடர்ச்சி▲

மேலும் காணி இல்லாதவர்களிற்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்ட போது மூவர் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது இருவர் அவற்றினை கைவிட்டு செல்லும் நிலை காணப்பட்டதுடன், கைவிடப்பட்ட பகுதிகள் காடுகளாக காணப்பட்டமையால் காட்டு விலங்குகளின் தாக்கம் பெருமளவு ஏற்பட்டது. இதன்போது பிரதேச செயலகத்தால் குறித்த பகுதியினை அருகில் உள்ளவர்கள் துப்பரவு செய்து பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டதுடன், உரியவர்கள் வரும் போது நட்ட ஈட்டினை பெற்றுக்கொண்டு வழங்க வேண்டும் என பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டது. – எனக் கூறினர்.

மேலும்,ஆர்ப்பாட்டத்தில்ஈடுபடுபவர்கள்கமக்காரஅமைப்பை சேர்ந்தவர்கள் பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர் என செய்வதாக கூறினர். இது தவறான கருத்தாகும். ஏனெனில் இந்தக் காணிகளிற்கு உரியவர்கள் குத்தகைக்கே வழங்கியுள்ளனர். மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிற்கு காணி அடையாளப் படுத்தப்பட்டும் காணியினை துப்பரவு செய்து எடுக்கவில்லை. – எனத் தெரிவித்தனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், ஆர்ப்பாட்டகாரர்களுடன் கலந்துரையாடினார். இது தொடர்பாக செட்டிகுளம் பிரதேச செயலாளர் சுலோஜனாவிடம் நேரடியாகச் சென்று கலந்துரையாடிய போது, குறித்த அருவித்தோட்டம் பகுதியில் விவசாயம் செய்வதற்கு மேலும் காணிகள் இருக்கின்றன எனப் பிரதேச செயலாளரினால் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு அந்தக் காணியினை துப்பரவு செய்ய வேண்டும் என்றும், அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டால் காணிகளைப்வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியுமெனவும் கூறியிருந்தார்.

இதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் காணிகளைப் பெற்றுத் தருவதற்கான தீர்மானத்தை எடுக்கச் செய்வார் என ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வாக்குறுதி வழங்கியதன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் பின்னர் கைவிடப்பட்டது.





# கொள்ளுப்பிட்டிக் களியாட்ட விடுதியில் துப்பாக்கிப் பிரயோக முயற்சி முறியடிப்பு

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் இரவு நேர களியாட்ட விடுதி ஒன்றில் துப்பாக்கிப் பிரயோக முயற்சி முறியடிக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் தற்போது மரண தண்டனை அனுபவித்து வரும் “தெமட்ட கொடை சமிந்த“வின் சகோதரர் “தெமட்ட கொடை ருவனை“ இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட இருந்ததாகத் தெரியவந்துள்ளது.

சமிந்த பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. இரவுநேர விடுதிக்கு அடிக்கடி சென்று வரும் தெமட்டகொடை ருவான் சம்பவத்தன்று வழக்கத்துக்கு மாறாக சற்றுத் தாமதமாகச் சென்றுள்ளார்.

இந்நிலையில், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள சென்றவர் ருவான் வருகை தந்துள்ளாரா எனத் தெரிந்து கொள்ள விடுதியின் வளாகத்துக்குள் நுழைய முயன்றுள்ளார்.

இதன்போது, சந்தேகநபருக்கும் விடுதியின் நுழைவாயிலில் இருந்த பாதுகாப்பு காவலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

பின்னர், துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்த வந்தவர் தான் வைத்திருந்த ரி – 56 துப்பாக்கியைச் சம்பவ இடத்திலேயே கைவிட்டுவிட்டு தனது சகாவுடன் தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது, துப்பாக்கி மற்றும் வருகை தந்த மோட்டார் சைக்கிள் இரண்டையும் கைவிட்டுவிட்டு சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்நிலையில், துப்பாக்கியும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் ரோஹன் ஒலுகலவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# பூச்சிக்கொல்லி, மசாலாப் பொருள்களுடன் இருவர் கற்பிட்டி இப்பன்தீவு பகுதியில் கடற்படையால் கைது

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

இலங்கைக் கடற்படையினர் கற்பிட்டி இப்பன்தீவு கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் மசாலா பொருள்களுடன் இரண்டு சந்தேக நபர்களை அவர்களின் மீன்பிடி படகுடன் மடக்கிக் கைது செய்தனர்.

இலங்கை கடற்படையினர் இலங்கையைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடல் பரப்பை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். கடல் வழியாக பொருள்களைக் கடத்துவது உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்க தொடர்ச்சியாக ரோந்து மற்றும் தேடல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி கற்பிட்டி இப்பன்தீவு கடல் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜய நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான மீன் பிடி படகொன்று கண்காணிக்கப் பட்டு சோதனை செய்யப்பட்டது. அதில் சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட ஏழு பைகளில் பொதி செய்யப்பட்ட 12 கிலோகிராம் ஏலக்காய் , பூச்சிக்கொல்லி மருந்துகள் வல்லப் பட்டை ஆகியவற்றுடன் இரண்டு சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 23மற்றும்35வயதுடையவர்கள்,கற்பிட்டியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஏலக்காய் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து, வல்லப் பட்டை என்பவற்றுடன் சந்தேக நபர்கள் இருவரும்மேலதிகசட்டநடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.









## கல்முனை - மட்டக்களப்பு வீதியில்

# குருக்கள்மடத்தில் உள்ளதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழியையும் தோண்ட முடிவு

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை – மட்டக்களப்பு வீதியில், குருக்கள்மடத்தில் உள்ளதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கான மீள் திட்ட வரைவை மன்றிற்குச் சமர்ப்பிக்குமாறு கொழும்பு சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் புதிய உத்தரவை விடுத்தது.

1990.07.12 ஆந் திகதி புனித ஹஜ் கடமையை நிறைவு செய்து வீடு திரும்பிய யாத்திரிகர்கள் மற்றும் வியாபாரிகள் கல்முனை – மட்டக்களப்பு பிரதான வீதியில் குருக்கள்மடம் எனும் இடத்தில் கடத்தி காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமை தொடர்பில் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றும் வரும் வழக்கு நேற்றைய தினம் திறந்த நீதிமன்றில் அழைக்கப்பட்டது. அப்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கச்ப்பட்டது

இந்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் அப்துல் மஜீத் அப்துல் ரவூப் என்பவரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், மனிதப்புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறு உரிய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நீதிவான் அப்போது கட்டளையிட்டிருந்தார்.

அதனடிப்படையில் நில அளவைத் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், தொல்லியல் திணைக்களம், காணாமல் போன ஆள்கள் தொடர்பான அலுவலகம், தடயவியல் மருத்துவம் மற்றும் நஞ்சியல் நிறுவகம் என்பன தமது ஆய்வுகளை மேற்கொண்டு குறித்த சந்தேகத்திற்கிடமான மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை முடிவுறுத்தி மன்றுக்கு திட்ட வரைவையும் சமர்ப்பித்திருந்தன.

இந்நிலையில், மன்றுக்கு சமர்ப்பணங்களை மேற்கொண்டிருந்த களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று, அதனை நீதிமன்றுக்கு அறிவிப்பதற்குத் தவணையொன்றை வழங்குமாறு மன்றுக்குத் தெரிவித்திருந்தனர். அதன் பிரகாரம், 04.10.2020 இல் சட்டமா அதிபரினால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக இந்த வழக்கானது கிடப்பிலிடப்பட்டிருந்தது.

இப்பின்னணியிலேயே இவ்வழக்கின் முறைப்பாட்டாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 11.07.2025 ஆம் திகதி, "குரல்கள்" இயக்கத்தின் சட்டத்தரணியால் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட நகர்த்தல் பத்திரம் மூலம் இந்த வழக்கு திறந்த மன்றில் அழைக்கப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளர் சார்பில் மன்றில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரணிகளின் சமர்ப்பணம் மற்றும் வழக்கேட்டை மிக நுணுக்கமாக ஆராய்ந்த நீதிமன்றம், முறைப்பாட்டாளரின் முறைப்பாடானது நீதிமுறையாக அணுகப்படாமல் நிலுவையாக உள்ளமையானது நீதியின்பாற்பட்டதல்ல எனும் அடிப்படையில் வழக்கை நேற்றைய தினத்துக்குத் தவணையிட்டார். அத்தினத்தில் மன்றில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபருக்கும், காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்துக்கும் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கும் அறிவித்தல் அனுப்புமாறு கட்டளையிடப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்றைய தினம் காணாமல் போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்தின் சட்டத்தரணிகள், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் மன்றிற்கு சமுகமளித்திருந்தனர். சட்டமா அதிபர் சார்பாக எவரும் நேற்று மன்றில் தோன்றியிருக்கவில்லை.

மன்றிற்கு சமர்ப்பணத்தை மேற்கொண்ட காணாமல் போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்தின் சட்டத்தரணி "குருக்கள்மடம் மனிதப் படுகுழியானது முறையாக தோண்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே எமது அலுவலகம் தொடர்ந்தும் பேணி வருகின்றது. குறித்த சந்தேகத்துக்கிடமான மனிதப் புதை குழி அமையப்பெற்றுள்ளதாக நியாயமாக நம்பப்படும் பிரதேசத்தைத் தோண்டுவதற்கான கட்டளையை மன்று வழங்குமிடத்து நாங்கள் அவதானிப்பாளர்களாகச் செயற்படத் தயாராக இருக்கின்றோம்." – எனத் தெரிவித்தார்.

இந்தச் சமர்ப்பணத்தை கருத்திற்கொண்ட நீதிமன்றம், குருக்கள்மடம் மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கான மீள் திட்ட வரைவை மன்றிற்குச் சமர்ப்பிக்குமாறு கொழும்பு சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிக்கு கட்டளையாக்கியதோடு அடுத்த தவணைத் தினத்தில் மன்றில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபருக்கும் கட்டளை வழங்கியுள்ளது.

வழக்கில் முறைப்பாட்டாளரான அப்துல் மஜீத் ரவூப் சார்பில் "குரல்" இயக்கத்தின் தலைவர் சட்டத்தரணி முகைமீன் காலித்தோடு அதன் சட்டத்தரணிகளான முபாறக் முஅஸ்ஸம், ஹஸ்ஸான் றுஷ்தி, எஸ்.எம்.மனாருத்தீன், எப்.எச்.ஏ.அம்ஜாட், ஏ.எல்.ஆஸாத் ஆகியோர் நேற்று மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கின்ற இடையறாப் பயணத்தில் "குரல்கள்" இயக்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.











# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை இயன் மருத்துவப் பிரிவு திறந்து வைப்பு

(வடிவேல் டினேஸ்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் இயன் மருத்துவப்பிரிவு திருக்கோவில் பிரதேச சபை தவிசாளரும், அம்பாறை மாவட்ட தமிழர் ஒன்றிய தலைவரும் SSK Construction நிறுவன உரிமையாளருமாகிய சுந்தரலிங்கம் சசிகுமாரால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

தவிசாளரின் நிதிப்பங்களிப்புடன் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரின் ஏ.பீ.மசூத் மேற்பார்வையில் இந்த இயன் மருத்துவப் பிரிவு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவின் போது உரையாற்றிய தவிசாளர், வைத்திய அத்தியட்சகரின் இந்த செயற்பாடு சிறந்த நிர்வாகத்திற்கான முன் உதாரணம் எனவும், விரைவாக வைத்தியசாலை அபிவிருத்திக்காக இரண்டாம் கட்டமாக சுமார் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளையும் சத்தித்த தவிசாளர் அவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஏ.பீ.மசூத், இயன் மருத்துவர் கணபதிப்பிள்ளை ஹரன்ராஜ் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி குழு, வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்கள், சமூகநலன் விரும்பிகளும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.














# அக்கரைப்பற்றில் உலமாக்களின் ஒன்றுகூடல், கௌரவிப்பு நிகழ்வு

(றிஸ்வான் சாலிஹூ)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை அக்கரைப்பற்றுக் கிளையின் உலமாக்களுக்கிடையிலான சினேகபூர்வ ஒன்றுகூடல் நிகழ்வு அதன் தலைவர் மௌலவி எம்.எம்.கலாமுல்லாஹ் (றஸாதி) தலைமையில் அக்கரைப்பற்று கடற்கரையில் உள்ள தனியார் விருந்தகமொன்றில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் இப்பிரதேசத்தை சேர்ந்த மூத்த உலமாக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். இளம் உலமாக்களின் அறிமுகமும் கௌரவிப்பும் மிக விமர்சையாக இடம்பெற்றன.

சுமார் 100 இற்கும் மேற்பட்ட உலமாக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், ஒன்றுகூடலைட் சிறப்புற வைக்கும் வகையில் மௌலவிமார்களின் கஸீதா, அரபுப்பாடல்கள் மற்றும் சிறப்பு பயான்கள் என்பனவும் இடம்பெற்றன. அத்தோடு முன்னாள் உலமா சபை அக்கரைப்பற்று கிளையின் தலைவர் மௌலவி எம்.எம்.அப்துல் லெத்தீப் (பஹ்ஜி) அவர்களினால் விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.











# சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் வடக்கு ஆளுநருடன் நேற்று சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் பொன்னையா குகதாசன் தலைமையிலான குழுவினர் ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் ஆதன மதிப்பீடு மேற்கொண்டு வரி அறவிடுவதற்கான ஒத்துழைப்புக்கள் மற்றும் சபையின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான கோரிக்கைகளை ஆளுநரிடம் அவர்கள் முன்வைத்தனர்.

மேலும், சபையின் இரண்டு உப அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் நிலையில் அதனை அமைத்துத் தருவதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் கோரிக்கை முன்வைத்தனர்.

இவற்றுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக ஆளுநர் தெரிவித்தார்.







# முதல்வர் ஸ்டாலின் நலமுடன் உள்ளார் என்று அமைச்சர் துரைமுருகன் தகவல்!



சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் நலமுடன் உள்ளார் என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

முதல்வர் ஸ்டாலின் நேற்றுக் காலையில் நடைபயிற்சி மேற்கொண்டபோது தலைசுற்றல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், அதிமுக முன்னாள் எம்.பி. அன்வர் ராஜா, திமுகவில் இணையும் நிகழ்வில் அவர் பங்கேற்றார்.

இந்த நிலையில், தலைசுற்றல் தொடர்ந்து இருந்து வந்ததால், சென்னை ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் வீதியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

முதல்வரின் உடல் நிலையைப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சைகளை மருத்துவர்கள் அளித்து வருகின்றனர். முதல்வர் ஸ்டாலினின் மனைவி துர்கா ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் மருத்துவமனைக்குச் சென்றனர்.

அப்போலோ மருத்துவமனை மருத்துவ சேவைகள் இயக்குநர் மருத்துவர் பி.ஜி.அனில் வெளியிட்ட செய்திக் குறிப்பில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நடைபயிற்சி மேற்கொண்டபோது லேசான தலைசுற்றல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தலைசுற்றல் ஏற்பட்டதற்கான காரணத்தை கண்டறிவதற்குத் தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், முதல்வரின் உடல்நிலை குறித்து அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் கூறும்போது, முதல்வர் ஸ்டாலின் நலமுடன் உள்ளார். அவர் விரைவில் நலம்பெற்று வீடு திரும்புவார் என்று தெரிவித்தார். திடீர் உடல்நலக் குறைவு காரணமாக, கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஸ்டாலின் இன்று பங்கேற்பதாக இருந்த நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, நடிகர் ரஜினிகாந்த், மநீம தலைவர் கமலஹாசன் மற்றும் அரசியல் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் ஆகியோர் முதல்வர் ஸ்டாலினின் உடல் நலம் குறித்து தொலைபேசி வாயிலாக விசாரித்தனர்.





## பண மூடை சிக்கிய விவகாரத்தில்

# நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவி நீக்க 200 இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் மனு!

நாடாளுமனற மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்றுத் தொடங்கியது. எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக லோக் சபா ஒத்திவைக்கப்பட்டது. அதே நேரத்தில் ராஜ்யசபாவில் பரபரப்பான விவாதங்கள் நடந்து வருகின்றன.

இந்தச் சூழலில், பணம் மூடை சிக்கிய விவகாரத்தில், நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க பிரேரணை தொடர்பாக, லோக்சபாவில் மொத்தம் 145 எம்.பிக்களும், ராஜ்யசபாவில் 63 எம்.பிக்களும் மனுத்தாக்கல் செய்தனர்.

பதவி நீக்கப் பிரேரணையைத் தாக்கல் செய்த 145 லோக் சபா எம்.பிக்களில் அனுராக் தாக்கூர், ரவி சங்கர் பிரசாத், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், ராஜீவ் பிரதாப் ரூடி, பிபி சவுத்ரி, சுப்ரியா சுலே மற்றும் வேணுகோபால் ஆகியோர் அடங்குவர். அரசமைப்பின் பிரிவுகள் 124, 217 மற்றும் 218 இன் கீழ் நீதிபதி வர்மாவுக்கு எதிராக நோட்டீஸ் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒரு நீதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணையில் லோக்சபாவில் குறைந்தது 100 எம்.பிக்களும், ராஜ்யசபாவில் குறைந்தது 50 எம்.பிக்களும் கையெழுத்திட வேண்டும். இந்தப் பிரேரணையை லோக்சபா சபா நாயகர் மற்றும் ராஜ்யசபா தலைவர் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு, பதவியில் இருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான அறிவிப்பில் 100 இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் கையெழுத்திட்டு உள்ளனர்.

பதவி நீக்கம் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்துள்ளனர் என நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.




# சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் வெடிவிபத்தில் 3 பேர் பலி; பலர்காயம்!

சிவகாசி அருகே நாரணாபுரம் பட்டாசு ஆலையில் நேற்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 2 பெண்கள் உட்பட 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

சிவகாசி அருகே திருத்தங்கல் பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன். இவர் நாரணாபுரம் – அனுப்பங்குளம் சாலையில் ஸ்ரீ மாரியம்மன் ஃபயர் வேக்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். நாக்பூரில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டு அமைப்பு (பெசோ) உரிமம் பெற்று இந்த பட்டாசு ஆலையில் 50 இற்கும் மேற்பட்ட அறைகளில் பேன்சி ரக பட்டாசுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த நிலையில், நேற்று வழக்கம் போல் 100இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு இருந்தனர். பிற்பகல் 3.40 மணி அளவில் பேன்சி நவீன பட்டாசுக்கு தேவையான மணி மருந்து கொண்டு செல்லும்போது உராய்வு காரணமாக வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் அந்த அறை முற்றிலும் இடிந்து தரைமட்டமானத்தில், அங்கு பணிபுரிந்த முத்துராமலிங்கபுரம் காலனியை சேர்ந்த கார்த்திகேயன் (24), லட்சுமி (45), சங்கீதா (40) ஆகிய 3 தொழிலாளர்கள் உடல் கருகி உயிரிழந்தனர்.

மேலும், அருகே உள்ள அறைகளுக்கும் தீ பரவியதில் 6 அறைகள் சேதமடைந்தன. தகவலறிந்து வந்த சிவகாசி தீயணைப்பு துறையினர், தீயை அணைத்து, இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்த சிவகாசி முத்துராமலிங்கபுரம் காலனியை சேர்ந்த முனியசாமி மனைவி நாகலட்சுமி (55), தங்கராஜ் மனைவி மாரியம்மாள்(50) ஆகியோர் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ‘ஒப்பரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையின் மூலம் இந்திய ராணுவப் பலத்தை உலகம் அறிந்தது!

## ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் மோடி தெரிவிப்பு



“ஒப்பரேஷன் சிந்தூர்“ நடவடிக்கை மூலம் இந்தியாவின் ராணுவப் பலத்தை உலகம் அறிந்தது என்று ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

மழைக்கால கூட்டத்தொடர் தொடங்க இருந்த சமயத்தில், நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் மோடி இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஆரோக்கியமான விவாதங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். ஒப்பரேஷன் சிந்து நடவடிக்கையால் இந்தியாவின் ராணுவ பலத்தை உலகம் அறிந்தது. ராணுவ வலிமையை உலகமே கண்டு வியந்தது.

ஒப்பரேஷன் சிந்தூரின் இலக்குகள் 100 சதவீதம் வெற்றி அடைந்துள்ளன. பாதுகாப்பு படையினருக்கு அளித்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டன. பயங்கரவாதிகள் முகாம்கள் 22 நிமிடத்தில் அழிக்கப்பட்டன.

மழைக்காலம் என்பது புதிய தொடக்கங்களுக்கான காலம். கடந்த 10 ஆண்டு சராசரி விட இந்த ஆண்டு மிக அதிகமான மழைப்பொழிவு உள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இந்தியாவின் கொடி பறக்கிறது. இந்தியாவின் வெற்றி மற்றும் கௌரவத்தைக் கொண்டாட இதுவே சரியான தருணம்.– என்று மேலும் தெரிவித்தார்.

## மருத்துவக் காரணங்களுக்காக

# இந்தியத் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் பதவி விலகல்



இந்தியாவின் துணை ஜனாதிபதி ஜகதீப் தன்கர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். மருத்துவ காரணங்களுக்காகத் தனது பதவியை தாம் ராஜினாமாச் செய்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் தனது ராஜினாமா கடிதத்தை அவர் அளித்துள்ளார். அந்த கடிதத்தில் ஜெகதிப் தன்கர் கூறியிருப்பவை வருமாறு:–

“உடல் நலத்தை முன்னிலைப்படுத்தவும், மருத்துவ காரணங்களுக்காகவும், இந்திய அரசமைப்பின் பிரிவு 67(ய)–ன் படி, இந்திய துணை ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்கிறேன். எனது பதவிக் காலத்தில் இந்திய ஜனாதிபதி எனக்கு அளித்த உறுதியான ஆதரவிற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதமருக்கும், மதிப்புமிக்க மந்திரிகள் குழுவிற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமரின் ஒத்துழைப்பும், ஆதரவும் விலைமதிப்பற்றவை. மேலும் நான் பதவியில் இருந்த காலத்தில் நிறைய கற்றுக்கொண்டேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடம் இருந்தும் நான் பெற்ற அரவணைப்பு, நம்பிக்கை மற்றும் அன்பு என்றும் என் நினைவுகளில் நிலைத்திருக்கும்.

நமது மாபெரும் ஜனநாயகத்தில் துணை ஜனாதிபதியாக எனக்கு கிடைத்த விலைமதிப்பற்ற அனுபவம் மற்றும் நுண்ணறிவுக்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன். இந்த குறிப்பிடத்தக்க காலகட்டத்தில் இந்தியாவின் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தையும், முன்னெப்போதும் இல்லாத அதிவேக வளர்ச்சியையும் நேரில் கண்டு, அதில் பங்கேற்றது எனது பாக்கியம்.

நமதுநாட்டின்வரலாற்றில்மாற்றத்தை ஏற்படுத்தும் சகாப்தத்தில் பணியாற்றியமை ஓர் உண்மையான கவுரவம். இந்த மதிப்புமிக்க அலுவலகத்தை விட்டு வெளியேறும்போது, பாரதத்தின் உலகளாவிய எழுச்சி மற்றும் தனித்துவமான சாதனைகள் குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். மேலும் அதன் பிரகாசமான எதிர்காலத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.”

–இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க சந்தை உச்சத்தில் இருக்க நான் இல்லையென்றால் முடிந்திராது!

## டொனால் ட் டிரம்ப் பெருமிதம் தெரிவிப்பு



நான் இல்லை என்றால், அமெரிக்க சந்தை இப்போது சாதனை உச்சத்தில் இருந்திருக்காது செயல் இழந்திருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரே சமூக வலைதளத்தில், வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது,

அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசென்ட், பெடரல் ரிசர்வ் தலைவர் ஜெரோம் பவலை நீக்குவதற்கு, எனக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதாக, ‘வால் ஸ்ட்ரீட் ஜர்னல்’ பத்திரிகை ஒரு வழக்கமான பொய்யான கதையை வெளியிட்டது.

அதை யாரும் எனக்கு விளக்க வேண்டியதில்லை. சந்தைக்கு எது நல்லது, அமெரிக்காவுக்கு எது நல்லது என்பது வேறு யாரையும் விட எனக்கு நன்றாகத் தெரியும். நான் இல்லை என்றால், சந்தை இப்போது சாதனை உச்சத்தில் இருந்திருக்காது. அது செயலிழந்திருக்கும்.

எனவே, உங்கள் தகவலைச் சரியாக வெளியிடுங்கள். மக்கள் எனக்கு விளக்கவில்லை. நான் அவர்களுக்கு விளக்குகிறேன். – என்று டிரம்ப் கூறியுள்ளார்.

# பங்களாதேஷில் நடந்த விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 19 ஆக உயர்வு

## இதில் 16 பேர் மாணவர்கள்



பங்களாதேஷில் பாடசாலை மீது பயிற்சி விமானம் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் 16 மாணவர்கள் உட்பட 19 பேர் பலியாகினர்.

வங்கதேச விமானப் படையின் பயிற்சி விமானம் டாக்காவில் உள்ள ஒரு பள்ளிக் கட்டடத்தின் மீது மோதியதில் 16 மாணவர்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

வங்கதேச தலைநகரான டாக்காவின் உத்தரா பகுதியில் உள்ள மைல்ஸ்டோன் பள்ளி மற்றும் கல்லூரி வளாகத்தில் நேற்று (21) வங்கதேச போர் விமானம் மோதியதில் 16 மாணவர்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

பயிற்சி விமானம் புறப்பட்டு சிறிது நேரத்திலேயே பாடசாலைக் கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது என்று வங்கதேச பாதுகாப்பு அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் பள்ளி வளாகத்தில் இருந்த 16 மாணவர்கள், விமானி முகமது டூகிர் இஸ்லாம் மற்றும் இரண்டு ஆசிரியர்களும் உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். விமானம் ஒரு பெரிய சத்தத்துடன் விழுந்து உடனடியாக தீப்பிடித்ததாக அப்பகுதியில் உள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். விபத்து நடந்த உடனேயே தீயணைப்புப் படைகள், அம்புலன்ஸ்கள் மற்றும் விமானப் படை ஹெலிகொப்டர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாகவும், காயமடைந்தவர்களை அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

விமானம் விபத்துக்குள்ளானபோது பள்ளியின் உள்ளே வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. காயமடைந்தவர்கள் ஒவ்வொருவராக வெளியே மீட்கப்பட்டு ள்ளனர் என்று மைல்ஸ்டோன் பள்ளி மற்றும் கல்லூரியின் செய்தித் தொடர்பாளர் ஷா புல்புல் தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து வங்கதேசத்தின் இடைக்காலத் தலைவர் முகமது யூனுஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “இந்த சம்பவத்துக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். விமானப் படை, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மைல்ஸ்டோன் பள்ளி ஊழியர்கள் மற்றும் இந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு ஈடுசெய்ய முடியாதது. இது தேசத்துக்கு ஆழ்ந்த வேதனையான தருணம்” என்று தெரிவித்துள்ளார்.












# இளையோர் சுகநலக் கண்காட்சியும் விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வும்

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், தாய்மார் கழகங்கள் இணைந்து நடத்திய இளையோர் சுகநலக் கண்காட்சி, விழிப்புணர்வு நடைபவனி என்பன வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கவிஞர் அம்பி கலையரங்கில் மேடை நிகழ்வுகள் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் வைத்து தாய்மார் கழகங்கள் இடையில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற தாய்மார் கழகங்களுக்கான கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உயிர்கொல்லி போதைப்பொருள் மற்றும் வீதி விபத்துக்களில் இருந்து மீட்டெடுக்கும் விழிப்புணர்வுக்காக நடைபவனி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி, தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வரையில் இடம்பெற்றது. அதன் பின்னர் அங்கு ஆளுநரால் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களுடன் யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிக் கல்லூரியின் அதிபர், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர், யூனியன் கல்லூரியின் அதிபர் ஆகியோரும் பங்கேற்றனர்.




















# இன்றைய ராசி பலன்கள் -22.07.2025




உங்களின் நிஜ ஆற்றலை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். உங்கள் இலக்குளை நிர்ணயித்து அதனை அடையச் செயலாற்றுங்கள்.

நீங்கள் கடினமாக பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள். உங்கள் சமயோசித புத்திக்குப் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

உங்களின் தேவையின் போது உங்களுக்கு பணம் கிடைக்கும். பங்கு வர்த்தகம் உங்களுக்கு லாபம் அளிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள். என்றாலும் விரும்பும் பலன்களை அடைய நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

உங்கள் பணிக்கு நற்பெயர் எடுப்பீர்கள். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்வீர்கள். அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் அதிக பண வரவைப் பெறுவீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




ஆன்மீக நிகழ்சிகள் மற்றும் சொற்பொழிவுகளில் பங்கு கொள்வது ஆறுதல் தரும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியில் பதட்டமான நிலைமை காணப்படும். சூழ் நிலையை அனுசரித்து நடந்தால் வெற்றி கிடைக்கும். என்றாலும் இது சற்று கடினமாக காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே அமைதியான போக்கை மேற்கொள்வது நல்லது. எனவே அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவு காரணமாக இன்று பணம் இழப்பீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர்ந்த உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை தேவை. தெய்வீகப் பாடல்கள் கேட்பது மற்றும் கேளிக்கை நிகழ்சிகளில் பங்கு கொள்வது மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் பணியில் நீங்கள் அதிக பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் அமைதியை நிலைநாட்ட நீங்கள் இதனை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவிற்கு உகந்த நாள் அல்ல. பண இழப்பு ஏற்படாமல் இருக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.

இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் குன்றி காணப்படும். கால் வலி ஏற்பட வாய்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்களுக்கு உற்சாகமான நாள். நீங்கள் வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். திட்டமிட்டு தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாகப் பழகுவதன் மூலம் நல்லிணக்கம் ஏறபடும். இதனால் இருவரும் பரஸ்பரம் மகிழ்ச்சி கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தரத்தை உயர்த்துவதற்கு சேமிப்பு நிலையை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். அதனை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு இன்று திருப்தி கிடைக்கும்.

நீங்கள் சிரத்தையுடன் உங்கள் பணிகளை முடிப்பதற்கு முயற்சி செய்வீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அலுவலகப் பயணம் ஒன்றைப் பற்றி ஆலோசிப்பீர்கள். முறையாகத் திட்டமிடுவதன் மூலம் இருவரும் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்ளலாம்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அதனை குடும்ப நலத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது உதவிகரமாக இருக்கும்..




இன்று சிறிது பதற்றம் காணப்படும். அதிக சௌகரியங்களை அனுபவிக்க இயலாது. நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். அமைதியின்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் உங்கள் பணிகளை முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். பணியில் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவிய சிறிது கவனமாக பணியாற்றவும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் மதிப்பு மிக்க பொருள்களைப் பத்திரமாக வைத்துக் கொள்வது நல்லது.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். அதிக நீரைப் பருகவும். சரியான நேரத்தில் உணவருந்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் -22.07.2025




இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். சௌகரியமாக இருக்க இத்தகைய சூழ்நிலையை தவிர்க்க வேண்டும். இசை கேட் பதன் மூலம் மன ஆறுதல் பெற லாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் கவனமாக மேற்கொள்ள வேண்டும். அதிகமாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் ஏமாற்ற உணர்வு காணப்படும். இது உறவின் நல்லிணக்க ஸ்தி ரத்தன்மையை பாதிக்கும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பணம் திருட்டு போக வாய்ப்புள்ளது.

இன்று சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர் பானங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றியை பெற்றுத் தரும். இன்று நீங்கள் அதிக பலன்களை காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை விரை வாகவும் எளிதாகவும் முடிப்பீர்கள். உங்களில் இருக்கும் திறமையின் மூலம் இது சாத்தியம். இது உங்களுக்கு நன்மை அளிக்கு ம்.

உங்கள் துணையுடன் இனிமையான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள். குடும்பத்தின் பல விஷயங்களை உங்கள் துணையுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங் கள் வங்கியிருப்பு உயரும். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப் படும். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




தினசரி செயல்களை மேற்கொள் ளும்போது யதார்த்தமான அணுகு முறை தேவை. பெரிய அளவில் செயல்கள் நடக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் கிடைக்கும்.

அதிக பணிகள் காரணமாக உங்கள் பணிகளில் தடைகள் காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொள்வீர்கள். இதனால் உறவு பாதிக்கும். உறவில் நல்லிணக்கம் காண இத்த கைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். ஆரோக்கியத்துக்காகப் பணம் கூடுதலாக செலவு ஆகும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.




உங்கள் வழக்கமான பணிகளை கவ னமாக முறையாக கையாள வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். ஆன்மீக நிகழ்ச்சி களில் ஈடுபடுவது நல்ல பலன் அளிக் கும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

குடும்ப பிரச்சினை ஒன்றைப் பற்றி உங்கள் துணை யுடன் விவாதிப்பீர்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இருவரும் பரஸ்பரம் கலந்து பேச வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக பணம் கூடுதலாக செலவு ஆகும். வீட்டு முன்னேற்றம் குறித்த செலவுகள் அதி கமாக காணப்படும்.

உங்கள் கண்கள் மற்றும் பற்களில் பாதிப்பு ஏற் பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. எனவே உங் கள் ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

# நிலந்த ஜயவர்தனவுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைப்பாடு இல்லை

## அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ தெரிவிப்பு

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் சேவை யில் இருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன வுக்கு மரணதண்டனை வழங்க வேண் டும் என்பது கத்தோலிக்கத் திருச்சபை யின் நிலைப்பாடு இல்லை."

– இவ்வாறு கொழும்பு மறை மாவட் டத்துக்கான தகவல் தொடர் இயக்கு நர் அருட்தந்தை சிரில் காமினி பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இலங்கை கத்தோலிக்கத் திருச் சபையின் மக்கள் தொடர்பு இயக்கு நர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர் னாண்டோ கொழும்பில் நேற்றுமுன்தி னம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, "உயிர்த்த ஞாயிறு தினத் தாக்கு தல் தொடர்பில் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன வுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். அவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டால்கூட பரவாயில்லை" – எனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இக்கூற்று அருட் தந்தை ஜூட்டின் தனிப்பட்ட கருத்தா கும் சிரில் காமினி பெர்னாண்டோ தெரி வித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபை யும்,உலகளாவிய திருச்சபையும் மரண தண்டனையை ஏற்றுக்கொள்வதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நிலந்த ஜயவர்தன தொடர் பில் ஜனாதிபதி ஆணைக்குழு முன் வைத்த அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்த வேண்டும் என நாங் கள் எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர்



குறிப்பிட்டார்.

அதேவேளை, சி.ஐ.டியின் இயக்கு நராக ஷானி அபயசேகரவையும்,பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலா ளராக ரவி செனிவிரட்னவையும் நியமிக் குமாறு ஜனாதிபதியிடம் பேராயர் கோரிக்கை விடுத்தார் என வெளியா கும் தகவல்களையும் அவர் நிராக ரித்தார்.